[5th August 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அறிக்கையை இந்தச் சபைமுன் வைக்கும்போது அவர்கள் என்னென்ன கருத்து தெரிவித்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளலாம்.

திரு. வை. சங்கரன் : அரசாங்கத்தின் இறுதி லட்சியம், கல்லூரி மட்டத்திலே தமிழைப் பயிற்சி மொழியாக வைக்க வேண்டுமென்பதா? அந்த லட்சியத்தை ஒட்டித்தான் இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்தின் இறுதி லட்சியம் இதுதான். தமிழ்ப் பயிற்சி மொழி மூலம் கல்வி கற்பிக்கப் படும்.

* 102 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா--

(அ) கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் தமிழும் போதனு மொழி ஆக்கப்படும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகளின் விவரமென்ன?

(இ) எந்த ஆண்டு முதல் அது அமலுக்கு வரும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : The Government have issued orders to introduce Tamil medium in Pre-University course in one Section in Humanities in all the Government Arts Colleges in this State with effect from 1966-67.

திரு. செ. மாதவன் : எல்லாக் கல்லூரிகளிலும் கலைப் பாடம் மட்டும் எடுக்கும் மாணவர்களுக்குத் தான் தமிழ் பயிற்சி மொழியாக வைக்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதா? அல்லது, விஞ்ஞானப் பாடங்களிலும் தமிழ் மூலம் போதிக்கலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது பல்கலைக்கழகம் அங்கீகாரம் அளித்திருப்பது கலைப்பாடங்களுக்கு மட்டும்தான். விஞ்ஞானப் பாடங்களைப் படிப்பதற்குப் போதிய தமிழ் நூல்கள் வேண்டியிருக்கின்றன.

திரு. சா. கணேசன் : விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் பயிற்று விப்பதற்கு விஞ்ஞானக் கலைச் சொற்களை 'இன்டர்நேஷனல் டேர்ம்ஸ்', அதாவது சர்வதேச சொற்களைக் கையாள்வது பயனுடையதாகவும் இருக்கும், சுலபமாகவும் இருக்கும், வாய்ப் புள்ளதாகவும் இருக்கும். ஆகவே, அதன்படி செய்ய உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கருத்துப்படிதான் கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நான் உதகைக் கலைக் கல்லூரியில் இந்த ஆண்டு தேர்வுக் குழு அங்கத்தினராக இருந்தேன். 300 மார்க்குகள்—நல்ல மார்க்குகள் வாங்கியவர்களைத்தான் சைன்ஸ் க்ரூப்பில் சேர்த்துக் கொண்டார்கள். குறைந்த மார்க்கு

5th August 1966]

வாங்கியவர்களைக் கட்டாயப்படுத்தித் தான் தமிழிலே ஒரு சில மாணவர்களைச் சேர்த்திருக்கிறோம். ஆகையால், அரசாங்கம் இந்தக் கொள்கையை விட்டு, கல்லூரியில் தொடர்ந்து ஆங்கிலத்தையே பயிற்சி மொழியாக எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துக்கொள்வதற்கு மாணவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள் என்று கூறுவதற்கு இடமில்லை. ஆங்கிலத்திலும் படிக்கலாம், தமிழிலும் படிக்கலாம். மாணவர்களுக்கு எது பிடிக்கிறதோ அதை எடுத்துக்கொள்ளலாம். இறுதி லட்சியம் தமிழைப் பயிற்சி மொழியாக்குவது என்பதை முன்பே குறிப்பிட்டேன். ஆகையால், இப்போது மாணவர்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் அதைக் கைவிடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இறுதி லட்சியம் தமிழைப் பயிற்சி மொழியாக்கவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆங்கிலத்தையும் பயிற்சி மொழியாக வைத்துவிட்டு, ஆங்கிலம் படித்தவர்கள் உயர்தரப் படிப்பு படிக்க முடியும், உயர்ந்த உத்தியோகத்திற்குப் போக முடியும் என்ற வாய்ப்புகளையும் வைத்துவிட்டு, தமிழைப் பயிற்சி மொழியாக வைத்திருக்கிறோம், வந்து சேருங்கள் என்றால் எப்படி மாணவர்கள் தமிழில் படிக்க வருவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர்படிப்பிற்கு வெளிநாட்டிற்குப் போகவேண்டும் என்பதற்கெல்லாம் தமிழில் மட்டும் படிக்கவேண்டுமென்று சொல்லமுடியாது. ரஷ்யாவில் கூட இந்த முறைதான் கையாளப்பட்டு வருகிறது. உயர்தர உத்தியோகத்திற்கு யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தமிழைப் பரிட்சை மொழியாக ஆக்க ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த மாநிலத்தில் சர்வீஸ் கமிஷன் பரிட்சையை முற்றிலும் தமிழிலே எழுதுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மொழிகளையும் தெரிந்து கொள்ளவேண்டும். தமிழ் மொழியிலே படிப்பதற்கு மேலும் மேலும் ஊக்கத்துடன் மாணவர்கள் முன்வருவார்கள் என்பதிலே எனக்கு ஐயம் இல்லை.

* 103 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken and arrangements made by this Government for making Tamil also as a medium in the Examinations to be conducted by the U.P.S.C.?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : During the Chief Ministers' Conference held at Delhi on 23rd and 24th February 1965, the importance of ensuring equality of opportunity in the Union Public Service Commission Examination as enjoined by the Constitution as between people belonging to different parts of the country was emphasised. It was also urged that every regional language should be admitted as one of the alternative media for the combined All-India Public Services Examinations. The whole